# ஆத்மஜோதி



ஸ்ரீமத். கோ. க. நடராஜா அவர்கள்




ஓர் ஆத்மீக மாத வெளியீடு.

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்

ஜோதி 20 | பிலவங்க ஸ்ரீ கார்த்திகைமீ 1 உ [18-11-67] | சுடர் 1


# பொருளடக்கம்


ஸ்ரீமத். கோ. க. நடராஜா அவர்கள் — 1
கோடியில் ஒருவர் — 3
ஸ்ரீமத். கோ. க. நடராஜா அவர்களின் வாழ்க்கை வரலாறு — 6
வாழிய நீடூழி வாழி! — 9
உள்ளம் கவர் கள்வன் — 11
ஆலமரமும் அரசமரமும் — 18
மக்களுக்கு ஓர் வழிகாட்டி — 23
சமயபுரம் (கண்ணனூர்) ஸ்ரீ மாரியம்மன் கோயில் வரலாறு — 31


## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா 100-00
வருடச் சந்தா 3-00
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா

பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. போன்: 353

# ஸ்ரீமத்

# கோ. க. நடராஜா அவர்கள்

### சிற்பரன் தாள் சேர்ந்த தினம்

ஆண்டு பிலவங்கத்(து) ஆயகன்னி யீரொன்பான்
பூண்ட புதன்துதியை பூர்வபக்கம் - நீண்டதவ
நற்பலன்சேர் சித்திரையாம் ஞானிநட ராசசித்தன்
சிற்பரன்தாள் சேர்ந்த தினம்.

### வாழ்க்கைச் சுருக்கம்

காட்சியும் கலையும் கனநிதிக் குவையும்
மாட்சியும் படைத்த வல்லுநகர் நலமும்
இனிதுற விளங்கும் இலங்கா தீபந்
தனியலூர் கொக்குவிற் றண்பதி விளங்க,
கருணை மனத்தான் கந்தை யாதர
வருநட ராச மாதவச் செல்வன்
தூய கலைகளில் தோய்ந்து சிறந்த
ஆயுர் வேத அருட்கலை தன்னைத்
திருநெல் வேலித் திரு. இராம லிங்கப்
பெருந்தகை யிடத்தில் பேணிப் பயின்று
மங்களம் பொலியும் தங்கம் மாவெனும்
நங்கையை மணந்து நவநிதி படைத்து
இராச ரத்தினம் எழில்மார்க் கண்டு
இராச நாயகம் சண்முக ராசா
அஷ்டலட் சுமியாம் ஐவரைத் தந்து
இஷ்ட சித்திகள் இதமிகப் பொருந்தி
மானிட ஜன்மம் வருபயன் கூட
ஞானியர் பலரை நலம்பெற நாடினன்
குலவிடு மாவைக் குட்டிச் சுவாமி
தலைபெறும் சோதித் தாளையன் சுவாமி
ஆமிவ ரனைய அற்புத சீலரை

மேவிய யோக மெய்ந்நெறி யாலே
அல்லும் பகலும் ஆத்ம தியானம்
சொல்லிய வரம்பில் சோதியைக் காணும்
சீலம் பயின்று திகழுமிவ் வாழ்வைக்
காலக் கூத்தின் கடனெனக் கண்டு
தன்னை யுணரும் தவநெறி பூண்டு
மன்னிய மனைவி மைந்தரொ டுறவை
மின்னென மதித்து விடுதலை நினைந்து
உன்னிய சிந்தனை யூற்றில் திளைத்து
சேர்பில வங்கம் சார்புரட் டாதி
ஈரொன் பான்புதன் இலங்குசித் திரையில்
கூட்டைப் பிரிந்து குருவா ரத்தில்
தேட்டமாய் வைத்த சிறந்த சமாதியில்,
காரைக் காற்சிவ கற்பக வீதியின்
சீரைக் காவும் தென்கீழ் திசையில்
'ஓம்நம சிவாய சிவாய நமஓம்'
நாமமுச் சரித்து நன்கமர்ந் தனனே.

தோத்திரம்

மன்னிய சித்த ஞான வைத்திய மணியே போற்றி
தன்னெறி யுணரும் மோனத் தவமுயர் தலைவா போற்றி
நன்னெறி பரவி நின்ற நடராச முனிவா போற்றி
முன்னிய சமாதி கொண்ட முதல்வனே போற்றி போற்றி

வாழ்த்து

குலம்பரவு கொக்குவிலூர்க் கொடையே யென்னக்
குணம்பரவு நெறிபிடித்த குருவே வாழி
சலம்பரவு செஞ்சடையோன் சரச மாயன்
தாள்பரவு நிட்டைபெறு தந்தாய் வாழி
நலம்பரவு கலைபெருகும் நாடி யின்ப
நடைபரவு நடராச நல்லோய் வாழி
தலம்பரவு காரைக்கால் தென்கி ழக்கில்
தவம்பரவு சமாதிகொளும் முனிவா வாழி.

# கோடியில் ஒருவர்

[ஆசிரியர்]

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு என்று ஞாபகம். தாமரை வல்லித் தோட்ட முருகப் பெருமானைத் தரிசிக்கச் சென்றிருந்தேன். தோட்டச் சொந்தக்காரருடைய வீட்டில் ஒரு சுவாமியாரைச் சந்தித்தேன். தாடியும் அவருடைய முக ஒளியும் யோகர் சுவாமிகளுடைய நினைவைக் கொண்டு வந்தன. அவர் யாரென்று என்னைக் கேட்க வைக்காமலே இவர்தான் கொக்குவில் நடராஜா வைத்தியர் என்று அறிமுகம் செய்து வைத்தார் தோட்டச் சொந்தக்காரர். எனக்கு அவரை நன்கு தெரியுமே என்று கூறினர் வைத்தியர் அவர்கள்.

வைத்தியர் அவர்களைப் பற்றியும் அவருடைய ஆத்மீக நாட்டம் ஆத்மீக வளர்ச்சியைப் பற்றியும் பலரிடம் அறிந்ததுண்டு. அவர்களைச் சென்று பார்க்க வேண்டுமென்று ஆசை கொண்டதும் உண்டு. இறைவன் கருணை எனக்குச் சமீபத்திலேயே அவர்களைத் தரிசிக்க வைத்துவிட்டது. அவர்களை நான் அறியப் பல சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனல் என்னை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. அறிந்தும் இருக்க மாட்டார்கள். என் உள்ளத்திலுள்ளதை நன்கு ஊடுருவிப் பார்த்தே தாம் அறிந்துள்ளதாகக் கூறினர்கள். அவர்களுடைய வார்த்தைகள் அவர் வைத்தியர்களுக் கெல்லாம் வைத்தியநாதன் என்பதை அறிவித்து விட்டன.

சாதாரணமாக வைத்தியர்கள் உடல் நோயைத் தீர்ப்பதோடு மாத்திரமே தமது தொழிலை நடத்துவார்கள். வேறு சிலர் உள்ளத்தையும் ஆராய்ந்து வைத்தியம் செய்வார்கள். ஆனல் நோயாளியின் உள்ள நோயைத் தாமே

அறிந்து கொள்ளத் தவறி விடுவதனல் அவர்கள் வைத்தியமும் சித்திப்பதில்லை. உடலையும் உள்ளத்தையும் கடந்து உயிரைப் பற்றிச் சிந்திக்கும் வைத்தியர்கள் லட்சத்தில் ஒருவர் என்று கூறலாம். ஆத்மீக சாதனையில் முன்னேறி தான் பெற்ற ஆத்மீக இன்பத்தை மற்றையோரையும் பெறச் செய்யும் வாய்ப்புப் பெற்றவர்கள் கோடியில் ஒருவர் என்றே கூறலாம். அத்தகைய கோடியில் ஒருவரே ஆத்மஞானி நடராஜ வைத்தியர் ஆவர்.

ஆயுர்வேதத்தின் ஆழ்ந்த ஆராய்ச்சியும் அனுபவத்திறனுமே அவர்களை ஆத்மீக நாட்டத்தில் கொண்டு சென்று சேர்த்தது என்று கூறலாம். எவன் ஒருவன் எத்தொழிலைச் செய்தாலும் அதில் ஆழ்ந்து செல்லும்போது அவனுக்கு அனுபவஞானம் உண்டாகின்றது. அந்த ஞானம் ஆத்மீகத்திற்கு வழிகாட்டி விடுகின்றது.

பகவான் ரமண மகரிஷிகள் 50 ஆண்டுகளுக்கு மேலாக தாம் இருந்த இடத்தை விட்டு அப்பால் செல்லாது உலகம் முழுவதற்கும் பேரொளியாக விளங்கினர்கள். யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் 23 ஆண்டுகளுக்கு மேலாக பகவான் அரவிந்தர் ஆச்சிரமத்தில் மோனத்தவம் புரிந்து ஞானச் செல்வங்களை வாரி வழங்கினர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமகம்சதேவர், சுவாமி சிவானந்தர், சுவாமி இராமதாசர், பகவான் அரவிந்தர் போன்ற மகான்களின் வாழ்க்கையிலும் இதனைப் பார்க்கின்றோம்.

இப் பெரியாரும் 30 ஆண்டுகள் வரை தமது வீட்டைத் தவிர அயல் வீடே அறியாதவராக இருந்து உடல் நோயைத் தீர்த்ததோடு ஆத்மீக சாதனையிலும் மிக மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். நவநாதசித்தர், நாகநாத சித்தர், குமரகுரு சுவாமிகள், யோகர்சுவாமிகள், கௌரீ பாலா போன்ற மகான்கள் தமது சாதனைகளுக்கு நாவலப் பிட்டிச் சூழ்நிலையைக் கொண்டிருந்ததை அறிவோம். இப் பெரியாரும் தமது விரதத்தை முடித்து முதன்முதல் 30 ஆண்டுகளின் சாதனையின் பின் வெளியே வந்தமை நாவலப்பிட்டிச் சூழலுக்காகும்.

செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிகளை வலிந்து சென்று ஆட்கொண்டது போன்று யோகர் சுவாமிகளும் இப் பெரியாரின் வீட்டிற்குப் பலமுறை சென்று இவரது ஆத்மசாதனைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளார்கள்.

வேட்டைவாளி தான் எடுத்த புழுவைக் கொட்டிக் கொட்டித் தன்னுருவாக மாற்றியது போல சாதாரண நடராஜ வைத்தியரை யோகர் சுவாமிகளும் தம்மைப் போல ஆக்கி வைத்தார்கள் என்றுகூறுவது மிகைப்படுத்திக் கூறுவதன்று.

பெரியார் தமது சமாதிநிலையை முன்னதாகவே உணர்ந்திருந்தார்கள். இணுவிலில் காரைக்கால் என்ற பகுதி ஆத்மீக அலைவீசப் பெற்ற ஒரு இடமாகும். அங்குள்ள அம்பாளின் கருணையும் அதன் சூழலும் பல மகான்களைச் சாதனைக்குத் தாமாகவே ஈர்த்தன. யோகர் சுவாமிகளை இராமநாதன் கல்லூரிச் சந்தியில் சந்திக்கும் போதெல்லாம் சுவாமிகள் காரைக்கால் சென்று வருவதாகப் பல அன்பர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். சுவாமிகள் ஏன் அங்கு சென்று வந்தார் என்பதைப் பலர் அறியார்.

இத்தகைய ஒரு சூழலிலேதான் இன்று நடராஜ வைத்தியருடைய சமாதி அமைந்துள்ளது. அவ்விடத்தையும் அவரே தெரிவு செய்து முன்னேற்பாடுகள் செய்திருந்தாராம். மூன்று நாட்களுக்கு முன்பு முக்கியமான இடங்களுக்குச் சென்று 3 நாளில் நான் காரைக்காலுக்குக் குடிபோய்விடுவேன் என்று கூறினாராம். அவர் சமாதி அடையும் நிலையைத்தான் குறிப்பிடுகிறார் என்பதை எவரும் அறியாதவரானார். இந்தியாவிலுள்ள ஆதீனங்கள் திருக்கைலாய ஞானபரம்பரையைக் குறிப்பிடுவது போன்று ஈழத்தில் வாழும் எமக்கும் ஒரு பரம்பரை உண்டு. அதுதான் கடையிற் குருநாதன் என்று போற்றப்படும் கடையிற் சுவாமிகள் பரம்பரையாகும். அப் பரம்பரை இடையீடின்றி ஈழம் முழுவதுமே வேரோடி தழைத்து வருகின்றது.

ஒவ்வொரு கணமும் புதியது. ஒவ்வொரு நாளும் புதியது. ஒவ்வொரு மாதமும் புதியது. ஆகையால் சாதனைகள் கைகூடி வரும்படி செய்ய உறுதி கொள்ளவோ, ஒருவர் தம்மைத் தாமே முன்னேற்றம் அடையச் செய்து கொள்ளவோ புதிய ஆண்டு பிறக்க, ஒரு ஆண்டு முழுவதும் கழியும் வரை காத்திருக்க வேண்டுவதில்லை. ஒவ்வொரு நிமிஷத்தையும் பயன்படுத்தி அதிலிருந்து நன்மையடையுங்கள்.

சத்திய சாயிபாபா

# ஸ்ரீமத் கோ. க. நடராஜா
## அவர்களின் வாழ்க்கை வரலாறு

(மு. சின்னத்தம்பி)

ஸ்ரீமாந். நடராஜா 'வைத்தியர்' அவர்கள் விஜய ஆண்டு கார்த்திகை மாதம் 2—ந் திகதியில் (16.11.1893) வியாழக்கிழமை கொக்குவில் மேற்கு, கோ. கந்தையா அவர்களுக்கு 2-ஆம் மகனாக ஜனனம் செய்தார்கள். கொக்குவிலில் இவர் தந்தையார் சிறந்த பிரபல வைத்தியர் மரபைச் சேர்ந்த குலோத்தமர்; சகல பண்பாடுகளோடும் சம்பத்துக்களோடும் நெடுநாள் வாழ்ந்தவர். அவருக்கு மகனுகப் பிறந்த 'வைத்தியர்' சிறுபராயந் தொட்டே தன்னடக்கம், தியாகம், ஈசுர தியானம் முதலிய நற்பண்புகளை வம்மிசச் சொத்தாகச் சுவீகரித்துக் கொண்டார்கள். தமது பாலிய வயதிலே திருநெல்வேலியில் வாழ்ந்து வந்த பிரபல ஆயுர்வேத வைத்தியர் திரு. இராமலிங்கம் அவர்களிடம் வைத்திய முறைகளையும் வாகடங்களையும் ஐயந்திரிபறக் கற்றுச் சிறந்த வைத்தியராகப் பெயர் பெற்ருர். உரிய வயதிலே 'வைத்தியர் அவர்கள்' அவ்வூர்ப் பிரபல வியாபாரியான திரு. வை. சின்னத்தம்பி அவர்களின் சிரேஷ்ட புத்திரி தங்கம்மாவை விவாகஞ் செய்து, திருவாளர்கள் இராசரத்தினம், மார்க்கண்டு, இராசநாயகம், சண்முகராஜா என்ற நான்கு புத்திரர்களுக்கும் அட்டலட்சுமி என்ற புதல்வி ஒருவருக்குந் தந்தையாரானுர். ஆரம்பத்தில் இவரிடம் காணப்பட்ட நற்குணங்களில் அவர் புடமிட்ட பொன் போல ஆத்ம ஞானியானுர். பாலியத்தில் இவர் சர்வமத சம்மதமுள்ளவராக சமயப் பெரியாரையும் வரவேற்று உபசரித்து, விருந்தோம்பி உபகாரியாய் இருந்து வந்தார். வயது ஏற ஏற — பக்தியோங்க - வோங்க திரு. நடராஜா அவர்கள் உண்மை மதமான சைவத்தைப் போற்றவும், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய படிகளில் நின்று சமாதி நிலை கூடவும் கூடிய புனிதராகத் தம்மைச் சீர் செய்து வந்துள்ளார்.

இப் பெரியார் ஆயுர்வேத வைத்திய நிபுணராக இலங்கைத் தீவிலும் இந்தியாவிலும் பிரபலம் பெற்ற ஞானபண்டிதர். வைத்தியர் அவர்கள் கோண்டாவிலிலுள்ள காரைக்கால் என்னுமிடத்தில் சென்று தியானம், ஆத்மதரிசனம் ஆகியவற்றில் தன்னையீடுபடுத்தி வந்தார். அந் நாட்களிலே அங்கு வந்து சேர்ந்த அடியார் கூட்டத்துக்குத் தர்மம், விருந்தோம்பல் முதலியவற்றைத் தாராளமாகச் செய்ததுமல்லாமல் அவர்களுக்குக் குருவாகவும் இருந்தார். கொக்குவிலிலுள்ள பல கோவில்களுக்கும் நிர்மாணிய வேலைகளுக்கும் பூஜைக்குமாக உதவி புரிந்தும் வந்துள்ளார். காரைக்காலிலுள்ள சிவன் கோவிலில் பலவிதமான தொண்டுகளையும் சேவைகளையும் செய்தும் செய்வித்தும் வந்துள்ளார். இக் கோவிலிற்றான் இவரின் கூடிய சேவை கைகூடியது. சிவன் கோவிலையடுத்துள்ள அன்பர்கள் உள்ளத்தில் கோவில் கொண்டிருந்த இவர் தாம் சமாதியாக இருப்பதற்கு ஆசைகொண்டு அதற்காக வேண்டிய ஒழுங்குகளை அங்கேயே செய்து வைத்திருந்தார்.

இவருக்கு இணுவிலிலும், கோண்டாவிலிலும், கொக்குவிலிலும் அநேக பக்த சீடர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் திரு. அம்பலவாணர் (மணியம்) சாமியார் வைத்தியரின் அருளுக்கும் அன்புக்கும் ஆதரவாளர் ஆவர்.

இப் பெரியார் பிலவங்க வருடம் புரட்டாதி மாதம் 18ஆம் திகதி (4.10.67) புதன்கிழமை சித்திரை நட்சத்திரத்தில் மனைவி, மக்கள், உறவினர், நண்பர் அயலாரைவிட்டு விட்டு என்றும் ஈடில் இன்பமருளும் இறைவன் இணையடிகளைத் தியானித்துச் சமாதி நிலையெய்தினார். இவரின்சமாதி காரைக்காலிலே அமைந்து இருக்கிறது. அடியார், தொண்டர் ஆதியோர் அங்கு சென்று அதனை வணங்கி வருகிறார்கள்.

நாராயணன், முருகன், ஆகியோரை ஆத்மார்த்த மூர்த்திகளாக வழிபட்டுவந்த வைத்தியர் அவர்கள் தமது பிற்காலத்திலே தென்னிந்தியா, இலங்கை ஆகிய இடங்களிலிருக்கும் சிவஸ்தலங்களுக்கும் மற்றைய கோவில்களுக்கும் சென்று வழிபாடும் வந்தனையும் ஆற்றி வந்திருக்கிறார்.

தர்மத்திலும்-சாதுசங்க இணக்கத்திலும்—பெரியார்ப்பேணல் விருந்தோம்பல் ஆகிய சிறந்த மனிதப் பண்புகளிலும் தன்னயமின்மை, தியாகம், ஆன்மதரிசனம், வீடுபேற்றவா

என்ற - ஆத்மசாந்திக்கான — மார்க்கங்களிலும் இவர் தம் வாழ்க்கையைச் சீர்செய்து சீவன் முத்தரானார். வெளிக்குச் சாதாரண மானுட வேடம் தாங்கிய ஒருவனாகக் காணப் பட்ட போதிலும் திரு. நடராஜா 'வைத்தியர்' அவர்கள் ஆன்ம ஈடேற்றத்துக்காக முயன்ற தவத்தினர் போலவே நடமாடினார். அவர்கள் ஆத்துமா சாந்தியில் நிலவுவதாக.

'கற்று மென்பலன் கற்றிடு நூன்முறை
சொற்ற சொற்கள் சுகாரம்ப மாகுமோ?நெறி
நிற்றல் வேண்டும் நிருவிகற்ப சுகமும்
பெற்ற பேரருள் பேசாப் பெருமையே'

மோட்சத்தின் இன்பம் உங்களுடைய பிறப்புரிமை. ஆனால் நீங்கள் அதை அறிவதில்லை. குரு உங்களுக்கு நினைவு படுத்த வேண்டியிருக்கிறது. கீதையின் பிரதி ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு பத்து ரூபாய் கடன் கேட்க உங்களுடைய நண்பனிடம் செல்லுகிறீர்கள். உங்களுக்குக் கடன் கொடுக்கும் பொழுது அவர் அப் புத்தகத்தை எடு த்து அதனுடைய பக்கங்களைத் திருப்புகிறார். அதனுள் நீங் கள் எப்போதோ மறந்து வைத்துவிட்ட ஒரு பத்துரூபாய்த் தாள் கீழே விழுகிறது. அப்போது உங்களுக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. குரு புதிய பொக்கி ஷத்தை உங்களுக்கு அளிப்பதில்லை. ஏற்கெனவே உங்களி டம் உள்ள பொக்கிஷத்தைத்தான் அவர் வெளிப்படுத்து கிறார். ஏதாவது ஒரு நற்குணத்தை வளர்ப்பினும் அது மற்ற தீய குணங்களை நசிக்கச் செய்யும். அவன் தன் உண் மைப் பொலிவைப் பெற்று மேன்மையடைகிறான்.

சத்திய சாயிபாபா.

★★★★★★★★★ ★★★★★★★★

# வாழிய நீடூழி வாழி!

(கவிமணி வே. செல்வநாயகம்)

★★★★★★★★★ ★★★★★★★★

### எண்சீர் விருத்தம்

திருவிரண்டு பொருமித்துச் சிறப்புத் தாங்கத்
தேசமெலாம் புகழ்செல்வம் சேரச் சீர்சால்
வருகலைதேர் கொக்குவிலூர் வாழ்ந்த நம்பி
வளர்கோபால் கந்தையா மகனுய் வந்த
ஒருபெரிய நடராசா உண்மைத் தொண்டன்
உலகுபுகழ் வைத்தியனுர் ஓதுங் காலை
மருவுமுனித் தன்மையுளான் மதிக்கப் பெற்ருேன்
மாகயிலை யரன்பாதம் மாண்பு சேர்ந்தான்.

அன்பறிவு கொடைவீரம் அனைத்தும் கொண்டு
அகமகிழ்ந்த மக்களினை அணைத்த மேலோன்
இன்பமிக ஞானியரை இளமைப் போதில்
ஏற்றியவ ரடிபணிந்து இறையே யென்ன
தன்பெரிய ஆத்மவழி தளைக்கப் பெற்ருேன்
தவப்பெரியோன் ஞானவான் தன்மை யாளன்
பொன்பொதிகைக் குறுமுனிபோல் பொலிந்த தோற்றம்
பூதலத்தில் சமாதிகொளும் புனிதன் ருனே.

சீர்பரவ நான்மக்கள் சிறக்கக் கொண்டோன்
செல்விமக ளொருவளையும் சேரப் பெற்ருேன்
பேர்பரவ வைத்தியத்தில் பெருமா னன்பில்
பெரிதுளங்கொள் சரம்நாடி பேணு மாற்றல்
ஏர்பரவும் நெறிவல்லான் என்றும் போற்ற
இலங்கிடுநல் நடராசா இவனே யென்ன
ஆர்வரினும் கைராசி ஆள னுக
அன்புறவே வைத்தியஞ்செய் ஆத்ம ஞானி.

காயமிது பொய்யென்று கதையாய்ச் சொல்லிக்
    காரைக்கால் தென்மேற்கில் சமாதி காட்டி
நேயமிது கொண்டரன்பால் நிதமும் போற்றி
    நீக்கமறப் பூரணன்பால் நிலவும் அன்பு
தேயமிதி லுள்ளோர்கள் சிந்தை கொள்ளச்
    சிறந்தநட ராசமுனி சிந்தை யானே
தோயமதி கொண்டபுகழ்ச் சிவனார் கூட்ட
    தோத்தரித்து நாமரனைத் தொழுது வாழ்வோம்.

இன்புதரும் எழிலுருவத் தேற்றம் காண
    எல்லவர்க்கு மேற்றூற்போல் இனிமை பேசி
அன்புதரும் பார்வையதால் ஆவலாக
    ஆறுதல் சொல் பெரியோனே அரனார் போலப்
பொன்பொலியும் தோற்றமிகப் புகழார் தீரன்
    பூதலத்தின் தானமதில் பொலிந்த தாகத்
தென்புலத்தோர் விருந்தோம்பும் திறமே யென்னச்
    செய்தன்ன தானமளி சிந்தை யோனே.

நடராசா வைத்தியனார் நாமஞ் சொல்ல
    நமனுமெமை யணுகானே நம்பன் பாதம்
கூடவரும் நோயாளி கூறு முன்னம்
    குறிப்பறிந்து வுளநோய்கள் கூறிக் கொள்ளும்
தேடரிய சித்தன்போல் தேச மக்கள்
    சிந்தைதொழ வாச்சரியம் சிவனே வென்பர்
ஆடமலன் அருளாலே அனைத்தும் வெற்றி
    ஆக்கியசீர் நடராசா அருளே வாழி!

வாழிபுகழ் நடராசா வள்ளால் வாழி
    வைத்தியனே சமாதிநிலை வாய்த்தோய் வாழி
தாளிரும்நீள் தாடிநரைச் சடையோய் வாழி
    தலையாயுள் வேதவழித் தகையோய் வாழி
ஆழியுல கனைத்துமுன தன்பு வாழி
    அரனுமையாள் பங்கிலுறை ஆர்வம்வாழி
ஊழிபல காரைக்கால் சமாதி ஓங்கி
    உலகதனில் வாழியநீ டூழி வாழி!

★★★★★★★★ ★★★★★★★★★

# உள்ளம் கவர் கள்வன்

[கி. வா. ஜகந்நாதன்]

வடமொழி வேதம் ருக், யஜுஸ், சாமம், அதர்வனம் என்று நான்கு வகைப்படும். அவற்றில் அதர்வனம் என்பது ஏனைய மூன்று வேதங்களிலும் உள்ள சிலவற்றைத தொகுத்து அமைத்தது என்பர். எனவே, இயல்பாகிய வேதம் மூன்றே. இது கருதியே வேதத்துக்குத் 'திரயீ' என்ற பெயர் உண்டாயிற்று. மூன்று வேதங்களுள் நடுவில் அமைந்திருப்பது ஸ்ரீ ருத்திரம். சிவபெருமானுடைய வணக்கமாக அமைந்துள்ள அப்பகுதி ஒரு வைரப் பெட்டியைப் போன்றது. அதனுள் நடுநாயகமாக ஸ்ரீபஞ்சாட்சரம் விளங்குகிறது. இறைவன் உலகில் பல பொருள்களாக இருக்கிறன் என்பதை ருத்திரம் சொல்கிறது. ஓரிடத்தில் 'கள்வர்களுக் கெல்லாம் தலைவனுக்கு வணக்கம்' என்று ஒரு மந்திரம் வருகிறது. 'தஸ்கராணும் பதயே நமோ நம: என்பது அது. தமிழ் மறையாகிய கொஞ்சும் தமிழின் முதல் பாட்டில் இறைவனைக் கள்வன் என்றே சொல்கிறார். ஞானசம்பந்தர் பதிகத்தில் வரும் பத்துப் பாட்டும் ஒரு முறைக்குப் பத்துமுறை கள்வன், கள்வன் என்றே சொல்கிறது.

கள்வர்களில் பலவகை உண்டு. நம்மை அறியாமல் நம்மிடம் உள்ள பொருளைத் திருடிச் செல்லும் கள்வர் ஒருவகை. இவர்கள் பெரும்பாலும் இரவில் தங்கள் தொழிலை நடத்துவார்கள். பகற் கொள்ளைக்காரர்கள் என்று வேறு ஒருவகை உண்டு. நம் கண் முன்னாலே நம்முடைய பொருள்களைப் பறித்துக் கொண்டு போகிறவர்கள் அவர்கள். இந்த இரண்டு வகையினரிலும் சிவபெருமானாகிய கள்வன் இரண்டாவது இனத்தைச் சேர்ந்தவன். கண்முன்னாலே தோன்றி நின்று சம்பந்தப் பெருமானிடம் களவை நிகழ்த்தியவன் அவன்.

தம்முடைய முயற்சியின்றி முன்னே இது நடைபெறும் என்ற எண்ணமும் இன்றித் தம்மிடத்தில் இருந்த பொருளை இறைவன் கொள்ளை கொண்டு செல்லப் பறி கொடுத்தவர்

சம்பந்தர். இறைவன் கள்வனுகிருன். அவன் சம்பந்தருடைய உள்ளத்தை வவ்விச் சென்ருன். ஆதலின் 'உள்ளங் கவர் கள்வன்' என்று பாடுகிருர்.

மக்களுக்கு உள்ளம், உரை, உடல் என்ற மூன்று காரணங்கள் இருக்கின்றன. இந்த மூன்றிலும் தலைமையாக நிற்பது உள்ளம். உள்ளத்திஞல் எண்ணியதை வாயிஞல் உரைத்து, உடம்பிஞல் செய்வது இயல்பு. உள்ளத்தில் மாத்திரம் ஒன்று நிகழுமாஞல் அது வெறும் நினைப்பாக நிற்கும். உள்ளமும் வாக்கும் இணையுமாஞல் அது பேச்சாக உருப் பெறும். உள்ளமும் உடம்பும் இணையுமாஞல் அது செயலாகத் தோற்றும். நினைப்புக்கும் பேச்சுக்கும் செயலுக்கும் இன்றியமையாத கருவியாக இருப்பது உள்ளம். மூன்று கரணங்களாலும் உண்டாகும் மூன்று வகை நிகழ்ச்சிகளுக்கும் பயன் உண்டு. மூன்று கரணங்களாலும் நாம் கர்மத்தைச் செய்கிருேம். நற்செயலாக இருந்தால் புண்ணியமும் தீய செயல்களாஞல் பாவமும் நம்மை அடைகின்றன. அந்த இரண்டு வினைகளின் பயனையும் இன்பமாகவும் துன்பமாயும் அனுபவிக்கிருேம். இம்மையில் செய்த நற்செயல் தீச்செயல்களின் விளைவு புண்ணியமாகவும் பாவமாகவும் நிற்க, அவை அடுத்த பிறவியில் இன்ப துன்பமாகத் தம்முடைய பயனைத் தருகின்றன. நல்ல செயல்களையும் தீய செயல்களையும் நெற்பயிரை விளைத்தலைப் போல நாம் செய்கிருேம். பயிர் விளைந்தால் நெல்லை அறுப்பதைப் போல நம்முடைய செயல்களின் முடிவில் புண்ணியம், பாவம் இரண்டு வினைகளையும் பெறுகிருேம். மீட்டும் அவை நிலத்தில் இட்டால் பயிராக விளைகின்றன. அப்படியே இரு வினைகளையும் கொண்டு பிறக்கும் உயிர்கள் இன்பதுன்பமென்னும் விளைவை நுகர்கின்றன. நாம் அடையும் இன்ப துன்பங்களுக்கு வினைகளே காரணம். அந்த வினைகளுக்குக் காரணமாக இருப்பவை நாம் செய்யும் செயல்கள். அந்தச் செயல்களுக்குக் காரணமாக இருப்பவை மூன்று கரணங்கள். அந்த மூன்றிலும் தலைமையாக நின்று எல்லாச் செயல்களிலும் எண்ணமாஞலும் உரையாஞலும் செயலாஞலும் இன்றியமையாததாக நிற்பது உள்ளம். சுருங்கச் சொன்ஞல் ஆலமரம்போலப்படர்ந்துபிறவிகளில்வரும்இன்ப துன்பங்களின் நுகர்ச்சிக்கு ஆணிவேராக இருப்பது மனம். இதனை எண்ணியே மனம் ஒன்றுதான் மக்கள் பெறும் பந்தத்திற்கும் மோட்சத்திற்கும் காரணம்

மனஏவ மனுஷ்யாணும் காரணம்
பந்த மோக்ஷயோ:

என்று வடமொழியில் ஒரு வாக்கியம் வருகிறது. நம்முடைய பிறப்பு இறப்புத் துன்பங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமானுல் எல்லாவற்றுக்கும் தலைமைக் கருவியாக உள்ள மனத்தை வயப்படுத்த வேண்டும். மனம் என்னும் அச்சாணி இல்லா விட்டால் வாழ்க்கை என்னும் தேர் முச்சாணும் ஓடாது. மனம் நல்ல வகையில் இயங்குமானுல் வாழ்க்கையும் நல்ல முறையில் செல்லும். அது எங்கும் ஓடாமல் நிற்குமானுல் வாழ்க்கையும் சலனமின்றி நிற்கும். அது அழிந்தே விடுமானுல் வாழ்க்கை என்னும் தேரே இல்லாமல் போய்விடும்; அதாவது பிறப்பு இறப்பு என்ற துன்பங்கள் இல்லாமல் அற்று விடும். மனோநாசமானவர்களுக்கு உடனே முத்தியின்பம் கைகூடும் என்று கூறுவார்கள். 'மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்' என்று வேண்டுவர் தாயுமானவர்.

இறைவனிடம் ஈடுபட்டு அன்பு செய்து சரியை முதலிய சோபானங்களைக் கடந்து பக்குவத்தில் உயர்ந்து நிற்பவர்களின் மனம் மெல்ல மெல்லத் தன்னுடைய கழற்சியினின்றும் நீங்கி அமைதி பெறும். இந்த உலகில் இருக்கும் போதே பக்தியினுலும் ஞானத்தாலும் பற்றற்ற நிலையைப் பெற்று வாழ்பவர்கள் இருக்கிறுர்கள். அவர்களை ஜீவன் முக்தர்கள் என்று சொல்வார்கள். அவர்களுக்கு நம்மைப் போலவே உடம்பு முதலியன இருந்தாலும் அவை யாவும் ஞானுக்கினியினுல் தூய்மை பெற்று விளங்கும். வறுத்த நெல்லை மண்ணில் போட்டால் முளைக்காது. அது போல அவர்களுடைய கரணங்கள் பிறப்புக்குக் காரண ரணமாகிய செயல்களைச் செய்வதில்லை. அக்காரணங்கள் யாவும் சிவகரணங்களாக மாறிவிடும். பசு கரணங்கள், பதிகரணங்களாக மாறி நிற்கும் நிலையே முக்தர்களுடைய நிலை என்று சாத்திர நூல்கள் பேசும்.

ஞானசம்பந்தப் பிள்ளையார் இறைவனை உள்ளங் கவர் கள்வன்' என்று பாடுகிறுர். அவரிடத்தில் இருந்த உள்ளம் இப்போது இறைவனிடத்தில் சென்று விட்டது. இன்னும் தெளிவாகச் சொன்ஞல், அவருடைய உள்ளம் அவருக்கே உரியதாக இல்லாமல் சிவனுடைய பொருளாகி விட்டது. இதுவரையில் அவருக்கு உரியதாகி அவரை

இயக்குவதற்குக் காரணமாக இருந்தது அந்த உள்ளம். இப்போது இறைவன் கையில் அகப்பட்டு அவன் இயக்கும் படி இயங்கும் நிலையில் இருக்கிறது. இதைப் பதிகரணம் பெற்ற நிலை என்றே கொள்ள வேண்டும். சம்பந்தர் உள் ளம் பதிகரணமானதை 'உள்ளங் கவர் கள்வன்' என்பது காட்டுகிறது. அவருடைய திருவாக்கும் இறைவன் திரு வாக்காக ஆகிவிட்டது. இதனைப் பின்னால் ''இலம் பையங் கோட்டூர்த், திருப்பதிகத்தில், ''எனதுரை தனதுரையாக'' என்று பாடுவார். இப்போது தேர் திசை திரும்பி விட் டது. சம்பந்தப் பெருமான் தாமாக விரும்பி முயற்சி செய்து திரும்பாயல் இறைவனே திருப்பிவிட அதன் போக்கு மாறிவிட்டது.

ஆகவே, ஞானப்பாலை உண்ட பிறகு ஞானசம்பந்த ரான இப் பெருமான் தம்முடைய பசு கரணங்கள் எல் லாம் பதிகரணமாக மாறப்பெற்று முக்த நிலையில் நின்று பேசுகிறார். மூன்று கரணங்களில் சிறந்ததான உள்ளத் தைச் சொல்லவே, உபலட்சணத்தால் மற்ற இரண்டு கர ணங்களும் சிவகரணங்களாகி விட்டன என்றே கொள்ள வேண்டும்.

* * *

இனி உள்ளங் கவர் கள்வன் என்ற தொடரை வேறு ஒரு வகையில் பார்க்கலாம். இந்தத் தொடர் காதல் உல கத்துப் பரிபாஷை. ஒரு காதலன் ஒரு காதலியை எதிர்ப் பட்டு, அவளைக் கண்டு மகிழ்கிறான், இருவருடைய கண் களும் ஒன்று படுகின்றன. அப்போது ஒருவருடைய உள் ளத்தில் மற்றவர் மாறிப் புகுவார்கள். காதல் உணர்ச்சி பெற்ற மங்கை தன் காதலன் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டான் என்றும், அவன் கள்வன் என்றும் கூறுவது ஒரு மரபு.

''யாரும் இல்லைத் தானே கள்வன்''
''கள்வனும் கடவனும் புனைவனுந்தானே''

என்பவை குறுந்தொகையில் வருவன.

''கண்வழி உளம்புகும் கள்வ னேகொலாம்''
என்பது கம்ப ராமாயணம்.

இங்கே உடம்பினால் மூன்று ஆண்டு மதலையாகவும் ஆண் குழந்தையாகவும் இருந்த சம்பந்தப் பெருமான் இறைவனுடைய திருவருளால் சிவ போகத்தைப் பெறும் பக்குவமுடைய மங்கையாகி விட்டார். இதுவரைக்கும் ஆணாக இருந்த பெருமான் இப்போது ஞானசம்பந்தநாயகி யாகிவிட்டார். உயிரினாலும் உணர்ச்சியினாலும் சிவகாமம் பெற்றுச் சிவ போகத்தை நுகர்கின்ற நிலை வந்து விட்டது. இந்தப் பாட்டில் அவ்வாறு மாறியது குறிப்பாகப் புலப் படுகிறது. ஆனால் பின்வரும் பாடல்கள் சிலவற்றில் வெ ளிப்படையாகவே ஒரு பெண்மணி பேசும் வாய்ப்பாட்டில் இந்தச் செய்தி உள்ளது. இந்தத் திருப்பதிகத்தின் மூன்றாம் பாட்டில்,

''நீர் பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதி சூடி
ஏர்பரந்த இன வெள்வளை சோர என் உள்ளங் கவர் கள்வன்''

என்றும், ஆறுவது பாட்டில்,

''மறைகலந்தஒலி பாடலோ டாடலர் ஆகி மழுவேந்தி
இறைகலந்தஇன வெள்வளை சோர என் உள்ளங் கவர் கள்வன்''

என்றும் பாடுவார்.

இவற்றால் காதலுடைய மங்கை யொருத்தியின் நிலை யே ஞானசம்பந்த நாயகியின் நிலை என்பது புலனாகும். ஒருவன்பால் விருப்பம் கொண்டவள் அவனை அடைய வேண்டும் என்ற ஏக்கத்தால் உடம்பு மெலிவதும், அத னால் வளை முதலியன கழல்வதும் அவருடைய முறுகிய காதலை விளக்கும் அடையாளங்கள். வளையிழப்பதும், கலன் களை இழப்பதும் உள்ளத்தை இழந்ததற்குப் பிறகு நிகழ் வன.

கம்ப ராமாயணத்தில் சீதையின் நிலையைச் சொல்ல வந்த கம்பர்,

''தழங்கிய கலைகளும் நிறையும் சங்கமும்
மழுங்கிய உள்ளமும் அறிவும் மாயையும்
இழந்தவள் இமையவர் கடைய யாவையும்
வழங்கிய கடலென வறியள் ஆயினாள்''

என்றுபாடுவார்.

அத்தகைய நிலையில்தான் இங்கே ஞானசம்பந்த நாயகி யார் நிற்கிறார். சிவ காமமே வடிவாகி உள்ளம் பறி போய்ச் செயல் இழந்து நிற்கும் இந்தக் காதல் அவரு டைய முக்த நிலையைக்காட்டுவது உள்ளம்உரைஉடல்ஆகிய கரணங்கள் இதுகாறும் பூண்டிருந்த வாசனைகள் எல்லாம் கழல, செயல்கள் எல்லாம் மாள நிற்கும் பேரின்ப நிலை இது. இதனையே சன்மார்க்க நெறி நின்ற மாணிக்கவாச கப் பெருந்தகையார்,

''—— ..................................... என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ''

என்றும்,

''வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல் நீர் மண்கெடினும்
தான் கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும் போய்
நான் கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ''

என்றும் தம்முடைய அனுபவமாகப் பாடுவார்.

இறைவனிடத்தில் ஈடுபடும் பக்தி நெறியால் மிகச் சிறந்ததாக நிற்பது நாயக-நாயகி பாவம் என்று சொல் வார்கள். இறைவனோடு இரண்டறக்கலக்கும் இன்பத்தை வேறு வகையில் உணர்த்த முடியாத பெரியோர் தலைவன் தலைவியினிடையே உள்ள அனுபவத்தை உதாரணம் காட்டு வார்கள். இந்தக் காதல் நிலையை மதுர பாவம் என்று பிறர் கூறுவர். இறைவனுடைய திருவருள் பெற்ற நாயன் மார்களும் ஆழ்வார்களும் தம்மை நாயகியாக ஆக்கிக் கொண்டு இறைவனை நாயகனாக வைத்துப் பாடிய பாடல் கள் பல. அப்படிப் பாடும் பாடல்கள் அவர்கள் இறைவன் காதலில் ஆழங்காற் பட்டு இழிந்து கரைந்து நிற்கும் நிலை யை நன்கு புலப்படுத்தும்.

வெவ்வேறு வகையில் சிவ பெருமானைப் புகழ்ந்து கொஞ்சும் தமிழால் பண் கலந்து இசைப் பாடல்களை வெள்ளமாகப் பாடத்தொடங்கிய ஆளுடைய பிள்ளையார், எடுத்தவுடன் எல்லா வற்றிலும் சிறந்ததாக நிற்கும் இறை யுணர்வுக் காதல் நெறியில் நின்று பாடுகிறார். இளங்

குழந்தை பாடும் போது எடுத்தவுடன் மேல் ஸ்தாயியைப் பிடிப்பது போல அமைகின்றது இப்பாடல். செயல்களுக்கு எல்லாம் அடிக்காரணமாக இருக்கின்ற உள்ளம் மாறிய மாற்றத்தைச் சொல்லும் இப்பாட்டில், அதற்குரிய காரணமும் முன்னுலே சொல்லப் பெறுகிறது. வேதியினுல் மாறிய இரும்பு பொன்னுனற் போல மூன்ருண்டுடைய பிள்ளையார் ஞானசம்பந்தராக மாறுகிருர். இறைவன் சுத்த சத்துவத்தின் அடையாளங்களாகிய வெண்ணிறப் பொருள்களைக் காட்டித் தூய சத்துவச் சூழலை உண்டாக்கி, ஞான சம்பந்தருடைய உள்ளத்தைச் சத்துவமயமாக்கி விடுகின்ருன். பிறகு அந்த உள்ளத்தைத் தான் மேற் கொண்டு பதிகரணமாகச் செய்து விடுகிருன். சாயம் தோய்க்க வேண்டிய துகிலை முதலில் நன்கு வெழுத்து, அப்பால் விரும்பிய சாயத்தில் தோய்ப்பது வழக்கம். அதுபோல இறைவன் சம்பந்தப் பிள்ளையாரின் திருவுள்ளத்தைச் சுத்த சத்துவ மயமாக்கிப் பின்பு அருள் இன்பப் பெருங்கடலில் கரைத்து விட்டன:

''... . ..... ......குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆகுமா னந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்''

என்று சுந்தரமூர்த்தி நாயனுருடைய அநுபவத்தைச் சேக்கிழார் கூறுவதைக்காண்க.

சிவஞானம் கைவரப் பெற்று இறைவனுடைய அருள் இன்ப வாரிதியில் தம்மைக் கரைத்துக் கொண்டு பெற்ற அனுபவ, அதிசய எழுச்சியால் சொற்கள் உணர்வு உருவம் பெற்று மலர்கின்ற சிவமண மலர்ச்சியை இங்கே கூறுகிறோம்.

'தோடுடையசெவி யன்விடை யேறிஓர் தூவெண் மதிசூடி
காடுடையசுட லைப்பொடி பூசிஎன் உள்ளம் கவர்கள்வன்'

என்று வருகிறது பாட்டு.

பிரயாணக் கட்டுரை 6

# ஆலமரமும் அரசமரமும்

(மு. சிவராசா)

காயா க்ஷேத்திரம் இந்துக்களுக்கும் பௌத்தர் களுக்கும் மிகவும் விசேடமானது. பல்குனி நதி தீரத்திலே அக்ஷயவடம் என்னும் ஆல மரத்தின் கீழ் தென்புதத்தாருக்குப் பிண்டம் சமர்ப்பித்தால், அவர்களின் ஆன்மா நிரந்தர ஓய்வு பெற்றுவிடும் என்பதும், அதன்பின் வருடா வருடம் செய்யப்படும் சிரார்த்தம் செய்ய வேண்டியதில்லை என்பதும் இந்துக்கள் கருத்து. வீட்டில் நாம் சிரார்த்தம் செய்யும் போதுகூட ''காயா வில் சிரார்த்தம் செய்த பலன் கிடைக்கட்டும்'' என்று பிரார்த்திக்கிறோம்.

காயாவில் அக்ஷயவடத்தின் சமீபமாக விஷ்ணு ஆலயம் ஒன்றுண்டு. இதைத் தவிர இந்துக் கோவில்கள் ஒன்றும் பெரிதாகவோ, பெருமை வாய்ந்ததாகவோ இல்லை. ஆனால் தலத்துக்கும், தீர்த்தத்துக்கும் அந்த ஆலமரத்துக்கும் உள்ள பெருமை அளப்பரிது. ஆவணி புரட்டாதி மாதங்களில் பல்குனி ஆற்றில் தண்ணீர் குறைவு. ஆனால் வருட முழுவதும் ஆற்றோரத்தில் மொய்த்திருக்கும் பண்டாக்களுக்குக் குறைவில்லை. இக்குருமாருக்குத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற தென்னாட்டு மொழி சரளமாகப் பேசத் தெரிகிறது. பண்டாககளைத் தவிர தரகர் கூட்டம் வேறு. சிரார்த்தம் செய்த மக்களில் மனச் சாந்தியோடு திரும்புவோரும். எவ்வளவுதான் பெற்றபோதும் ''திருப்திரஸ்து'' என்று மனமாரச் சொல்லும் பண்டாக்களும் மிக மிக அரிது. வியாபாரமுறையில் கூலி பேசிக்கொண்டே சிரார்த்தம் செய்யத் தொடங்குகிறார்கள். இருபத்தைந்து பைசாவிலிருந்து 250 ரூ. வரை-ஏன் இன்னும் அதிகமாகவும்-பணம் வாங்கிப் பிண்டம் போடுவித்து, யாத்திரிகர்களின் மூதாதையர்களை சுவர்க்கத்துக்கோ. வைகுண்டத்துக்கோ அனுப்பிவைக்கப் பண்டாக்கள் முன்வருவார்கள்!

காயாவில் பிண்டம் போடுவதில் மிக விரிவான முறையும் உண்டு. சுருக்கமாகச் செய்வதெனில் பல்குனி நதி தீரத்திலும், விஷ்ணு பாதத்திலும், அக்ஷய வடத்தின்

கீழும் பிண்டம் போடலாம். இதனிலும் சுருக்கமாகச் செய்வோர் ஆற்ருேரத்தில் மட்டும் பிண்டம் போடுவர். விஷ்ணு கோவில் கர்ப்பக் கிருஹம் சுமார் 12 அடிச்சதுரம். நடுவில் நாலடி விட்டத்தில் தொட்டி போல் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதில் மகாவிஷ்ணுவின் பாதங்களிரண்டும் சிலா ரூபத்தில் இருக்கின்றன. கர்ப்பக் கிருஹத்தின் உட்சுவர்களில் பல்வேறு தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. விஸ்ணுபாதத்தில் பிண்டம் சமர்ப்பித்த பின், ஆலமரத்தின் கீழ் சமர்ப்பிக்க வேண்டும். இங்கு கிரியைகள் செய்து முடியும் போது ''இனிமேல் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றையும் விட்டு விடுவேன்'' என்று பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டும். கலியுகத்து மக்களால் இந்த மூன்று நற்பண்புகளையும் விட்டு எப்படி வாழமுடியும்? அதனுல் அவற்றுக்குப் பதிலாக ஒரு இலை, ஒரு காய், ஒரு பழம் ஆகியனவற்றை விட்டுவிடுவதாக உறுதி பூணுகிருர்கள். காயாவின் அக்ஷயவடத்தை நினைவுறுத்தி இலைகளிலே ஆலிலைதான் குறிப்பிடப்படும். காய், கனிகளுள் தமக்கு மிகவும் பிடித்தமான வற்றைத் தியாகம் செய்வதையே சாஸ்திரங்கள் வேண்டுகின்றன, ஆனல் காஞ்சுரங்காயையும், எட்டிப் பழத்தையும் விட்டு விடுவதாக ஒத்துக் கொள்ளுவாரும் உண்டு. ஏனெனில் விட்டுவிட்டன வற்றை வாழ்க்கை முழுவதும் எந்த அவசியத்தை முன்னிட்டும் உபயோகப்படுத்தக் கூடாதல்லவா! உலகப் பொருட்களின் மீதுள்ள ஆசையை ஒவ்வொன்ருக விட்டுவிலக உணவுப் பண்டங்கள் இரண்டை இந்த முறையில் விடுவது முதற்படி. ஆனல் காயா சென்று வருவோரில் பலர் அந்த முதற்படியிலே நின்று விடுகிருர்கள்.

இளவரசர் சித்தார்த்தர் தன் அரசையும், உறவையும், துறந்து காடு சென்று தவமிருந்தார். உண்மை நெறிதேடிய அவ்வுத்தமருக்கு காயாவிலுள்ள வெள்ளரசமரத்தின் கீழ் தான் போதம் உண்டாயிற்று. புத்த காயா எனப் போற்றப்படும் இடம் காயா புகையிரத நிலையத்திலிருந்து சுமார் எட்டு மைல் தூரம், பஸ்களும் தனியான மோட்டார் வண்டி, குதிரை வண்டிகளும், கிடைக்கும். புத்த காயா விகாரை உலகப் புகழ் பெற்றது. விகாரையின் பின் புறத்திலும், வளவினுள் பல இடங்களிலும் போதி விருட்சம் வளர்கிறது. ஆயின் போதி மாதவர் தவமிருந்த விருட்சத்தின் கிளையிலிருந்து வளர்ந்த வெள்ளரசு உலகிலேயே இலங்கையில் அநுரதபுரியில் மட்டும்தான் இப்

போது உண்டு. தாய் மரம் பட்டுப்போயிற்று. ஏனைய வெள்ளரசுக ளெல்லாம் பிற்சந்ததிகள்!

காயா புத்தர், பத்மாஸனத்தில் வலது கை நிலத்தை நோக்கித் தாழ்ந்தும், புறங்கையே தெரியும்படியும் தியானத்தில் இருக்கும் நிலையைக் குறிக்கிறது. இந்த வகையில் உள்ள புத்தர் சிலைகளெல்லாம் காயா பாணியில் ஆனவை. விகாரையின் மேல் மாடியில் புத்தர் பிரான் ஐந்து வேறு நிலைகளில் காட்சி தருகிறார். விகாரை எல்லைக்குள் திருக்குளம் ஒன்றுண்டு சமீபத்தில் சீனு, திபேத்து, போன்ற பௌத்த நாடுகள் கட்டுவித்த மடங்களும் நூதன சாலை ஒன்றும் இருக்கின்றன.

செப்டம்பர் மாதம் பத்தாம் தேதி என் சகபாடிகள் சிலருடன் காயாவில் தங்கியிருந்தேன். சிரார்த்தம் செய்து புத்த காயாவும் தரிசித்து மறுநாள் பற்னு சென்றோம். பாடலிபுரம் எனப் பழம் நூல்களில் புகழப்படும் பற்னு பீகார் ராஜ்யத்தின் தலைநகர். வாடகைக்கார் பிடித்து ஊர் சுற்றிப் பார்த்தோம். ராஜ்யசபைக் கட்டடம், தேசாதிபதி மாளிகை, காலஞ்சென்ற ராஷ்டிரபதி பாபு இராஜேந்திரப் பிரஸாத் அவர்கள் வாழ்ந்த இல்லம் ஆகியன குறிப்பிடத்தக்கன. பிரஸாத் அவர்களின் வீட்டைத் தேசிய நூதன சாலையாக்கிப் பாதுகாக்கின்றனர். அங்கு பாபு அவர்கள் உபயோகித்த நாற்காலி, படுக்கை, காலணி, கைத்தடி, உடைகள் முதலியனவும், அவர்களுக்குப் பிற தேச அரசாங்கங்கள் உவந்தளித்த பரிசுப் பொருட்களும், அன்னாரது பல்வேறு தோற்றங்களில் எடுக்கப்பட்ட புகைப் படங்களும் வைக்கப்பட்டுள்ளன. இத்தனை பெரிய மனிதர், எத்தனை அடக்கமான வாழ்வை மேற் கொண்டிருந்தார் என்பதை அறிந்த போது மயிர் கூச்செறிந்தது.

பற்னுவிலிருந்து காசிக்குச் சென்றோம். காசியில் டீசல் றயில் இயந்திரங்கள் செய்யும் தொழிற்சாலை (Diesal Loco Works) உண்டு. அத் தொழிற் சாலையில் மூன்று நாள் பயிற்சி பெற்றோம். பின்னர் 19, 20ம் தேதிகளில் பேபால் மின்சார யந்திரத் தொழிற் சாலையில் பயிற்சி. இடையிலிருந்த நாலு நாட்களில் அலாஹாபாத், கான்பூர் ஆகிய இடங்களுக்குப் போனோம். அலாஹாபாத் காசியிலிருந்து முகல் சாராய் வழியாக சுமார் 110 மைல். பிரயாகை என்று பேசப்படும் தலம் இது. கங்கையும், யமுனையும்

சரஸ்வதியும் கலக்கும் திரிவேணி சங்கமம் இங்குள்ளது. திரிவேணி சங்கமத்தில் மகா மக தீர்த்தம் விசேடமானது. கோடிக் கணக்கான மக்கள் அன்று அந்தச் சங்கமத்தில் தீர்த்தமாடுவர். அலாஹாபாத் புகையிரத நிலையத்திலிருந்துசங்கமம் நாலுமைல் தூரமிருக்கும். நதிகள் கலக்கும் இடம் கரையிலிருந்து சற்று உள்ளே. படகில் தான் செல்ல வேண்டும். கார்மேக நிறக் கண்ணனும், செம்மேனி யெம்மானும் சேர்ந்த ஹரிஹரன் போல புகைநிற யமுனையும், வெண்ணிறக் கங்கையும், ஒன்று சேருமிடத்தில் இறங்கி நீராடும் போது ஆஸ்திகர் உள்ளத்தில் பக்தி வெள்ளம் பெருகும். சாதாரண மக்கள் கண்ணுக்குத் தெரியாத படி அந்தர்யாமியாகக் கலக்கிறது சரஸ்வதி நதி என்கிறார்கள். அந்தச் சரஸ்வதி நதி என்பது உள்ளத்தில் பொங்கிப் பெருகும் பக்தி வெள்ளம்தானே! சங்கமத்துக்கருகே பழைய கோட்டை ஒன்றும், எப்போதும் ஸ்ரீ ராம மந்திரம் ஒலித்துக் கொண்டிருக்கும் ஹனுமார் கோவில் ஒன்றும் இருக்கின்றன.

அலாஹாபாத்துக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. மனித குல மாணிக்கமாய்த் திகழ்ந்த பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் இடம் இது. அவரது தந்தையார் தேசத்துக்காகத் தியாகம் செய்த 'ஆனந்த பவன்' மாளிகை, அக்குடும்பம் இருந்த செல்வ நிலையையும், அதன் தேச பக்தியையும் பறைசாற்றி நிற்கிறது. நாங்கள் அலாஹாபாத்தில் நின்ற தினத்தில் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார்கள். அவ்விடத்து அரசியற் கூட்டம் ஒன்றையும் பார்க்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டிற்று.

மறு நாள் காலை கான்பூர் சென்றோம். கான்பூர் உத்திர பிரதேசத்தில் மிகப் பெயர் பெற்ற தொழில் நகர். இங்கு செய்யப்படும் தோல் பெட்டிகள், காலணிகள். பிரசித்தமானவை. பஞ்சாலைகளும், நெசவாலைகளும், வேறு பல தொழிற்சாலைகளும் இங்கு நிறைய உண்டு. புகை வண்டி நிலையத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் J. K. Temple என்றொரு கோவில். சலவைக் கல்லால் கட்டப் பெற்றுக் கம்பீரமாய்த் தோற்ற மளிக்கும் அதன் முன்னே நீண்டு விரிந்து கிடக்கும் மைதானம். கோவிலில் மூர்த்திகளாக நடுவே ராதாக் கிருஷ்ணர் உருவும், அதன் வலப் புறத்தே சிவலிங்கமும் இடப் பக்கத்தே இன்னொரு ராதாக்

கிருஷ்ணர் உருவும், அழகொழுகக் காட்சியளிக்கின்றன. உயர்ந்து நிற்கும் சலவைக் கல் தூண்களில் சிவன், விஷ்ணு, ஆகியோரின் திருவிளையாடல்களைச் சித்திரித்திருக்கின்றார்கள். இந்த விமானக் கோவில்கள் பல வட நாட்டிலுண்டு. ஆனால் இவற்றுள் நுழையும் போது மகிழ்வும், பிரமிப்பும் ஏற்பட்டதே தவிர உள்ளத்தில் பக்தியும் பரவசமும் ஏனோ எனக்கு ஏற்படவில்லை!

மறுநாள் மத்தியப் பிரதேசத்தின் தலைநகரான போபால் வந்து சேர்ந்தோம். அங்கிருந்த போது 42 மைல் தொலைவிலுள்ள சாஞ்சி என்னும் பௌத்த தலத்துக்குச் சென்று வந்தோம். சாஞ்சியில் கௌதம புத்தரின் முக்கிய சீடர்களான ஸாரிபுத்த, மஹா மொக்கலான ஆகியோர் போதி ஸத்வரின் நெறிபரப்பி வந்தனர். அவர்களின் சின்னங்களைக் கொண்ட ஸ்தூபி ஒன்றிருக்கிறது. இலங்கை மக்கள் எழுப்பிய கோவில் ஒன்று பக்கத்தே இருக்கிறது. பௌத்த தலங்களி லெல்லாம் இலங்கைச் சிங்களவர்கள் சிலர் இருக்கின்றனர். இவர்களைக் காணும்போது எம் உள்ளங்களில் ஒருவித மலர்ச்சி ஏற்படத் தவறியதேயில்லை.

போபாலில் உள்ள மின்சார இயந்திரத் தொழிற்சாலையில் (Heavy Electricals) மின் இயந்திரங்களும், உபகரணங்களும் செய்கிறார்கள். அங்கு கையாளப்படும் கணக்கு வைப்புமுறை பற்றி இரண்டுநாள் விரிவுரை நடந்தது. போபால் சமஸ்தானமாயிருந்த இடம். பின்னர் ஸ்ரீ வல்லபாய்படேல் அவர்களின் முயற்சியால் இந்திய யூனியனுடன் இணைந்தது. இங்கு பிர்லா ஒரு கோவில் கட்டியுள்ளார். இங்குமட்டுமென்ன - ஊரெல்லாம் பலநூறு கோயில்களை லட்சோபலட்சம் ரூபா செலவழித்துக் கட்டியுள்ளார். இக் கோயிலும் காசிப் பல்கலைக் கழகத்திலுள்ளது போன்றதே. ஆயின் உருவிற் சிறியது. கோவில் இருக்கும் இடம் நகரின் மேடான பகுதி. இங்கு நின்று பார்த்தால் போபால் நகரம் முழுவதும் தெரிகிறது. தொழிற்சாலைத் தாபனத்தார் தங்கள் மோட்டார் வண்டி ஒன்றில் எங்களையெல்லாம் அழைத்துச் சென்று நகரின் பல்வேறு பகுதிகளையும் காட்டினார்கள்.

போபாலிலிருந்து 20-9-66ல் பட்டான் கோட்கடுகதிப் புகைவண்டியிலேறி காஷ்மீர் நோக்கிப் புறப்பட்டேன்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# மக்களுக்கு ஓர் வழிகாட்டி

திி. கி. லக்ஷ்மி. மதருஸ்

பாவம் இதுநாள்வரை இந்த விஷயத்தை மறைத்து வந்தும் இன்று தன் குழந்தையின் அதிகமான துயரத்தை தணிப்பதற்காக தன் கணவரின் உண்மை விஷயத்தைக் கூறிவிட்டாள். விபரத்தைத் தெரிந்து கொண்ட துருவன் வீறு கொண்டு எழுந்தான். அம்மா! நீங்கள் சிறிதும் கவலையில்லாமல் இருங்கள். என் தந்தை பெரும் அரசனாக இருந்தும் தாங்கள் ஏன் இப்படித் துன்பமுற வேண்டும்? இதோ இப்பொழுதே என் தந்தையிடம் சென்று வருவேன் என்று புறப்பட்டு விட்டான் வீரச் சிறுவன்.

ஐயோ! குழந்தை அரண்மனை சென்றால் இளையவள் கொடுமைப் படுத்தி துரத்தி விடுவாளே! என் செய்வது என்று பயந்து அவனை அரண்மனை போக விடாமல் தடுத்தாள்.

குழந்தை துருவன் தன் எண்ணத்தில் உறுதியுடனேயே இருந்தான். அம்மா! நான் முன் வைத்த காலை பின் எடுக்க மாட்டேன். எத்தகைய துன்பம் வரினும் தந்தையைக் கண்டே வருவேன். தயவு செய்து தடை செய்யாதீர்கள். ஆசீர்வதித்து என்னை அனுப்புங்கள் என்று விடாப்பிடியாக தாயிடம் ஆசி பெற்று அரண்மனை சேர்ந்தான். எப்படியோ காவல்காரர்களையும் கடந்து அரசி இருக்கும் அந்தப்புரத்தையும் அடைந்து விட்டான். அங்கே அவன் கண்ட காட்சி. அவன் தந்தையின் மடியில் தன்னை ஒத்த ஓர் சிறுவன் உட்கார்ந்திருப்பதையும் அவர் அருகில் சிற்றன்னை நின்று கொண்டு சிரித்து மகிழ்ந்து கொண்டிருப்பதையும் கண்டான். மடமடவென்று ஓடிச் சென்று அரசனின் மற்றொரு மடியில் அப்பா அப்பா என்று கூறிக் கொண்டே ஏறி உட்கார்ந்து கொண்டான்.

எதிர்பாராத இந் நிகழ்ச்சியைக் கண்ட இளையவள் திடுக்கிட்டாள். வந்திருப்பது தன் மூத்தாளின் குழந்தை

என்பதை ஊகித்து அறிந்து கொண்டு வெகுண்டு எழுந்தாள். அடே! துரதிஷ்டப் பயலே அரசனின் மடியிலிருந்து கீழே இறங்குடா! உனக்கு அவர் மடியில் உட்கார அதிகாரம் கிடையாது. என்மகனுக்குத்தான் அந்த உரிமை உண்டு. மரியாதையாக அவர் மடியிலிருந்து கீழே இறங்கி வெளியே செல். இல்லையென்றால் கழுத்தைப் பிடித்து நானே தள்ளுவேன் என்று கர்ஜித்தாள்.

பாவம் அரசனே அவள் வார்த்தையை மீளவும் முடியாமல் குழந்தையைக் கீழே இறக்கிவிடவும் மனதில்லாமல் தவித்தார்.

தான் இத்தனை கூறியும் குழந்தை அரசனின் மடியில் இன்னும் உட்கார்ந்திருப்பதைக் கண்டு கோபம் கொண்டு வேகமாக ஓடிச்சென்று குழந்தையை அரசனின் மடியிலிருந்து கரகரவென்று கீழே இறக்கித் தள்ளி விட்டு அடே! இந்த அரசனின் மடியில் அமர வேண்டுமானால் இறைவனை வேண்டி என் வயிற்றில் பிள்ளையாகப் பிறந்தாயானால்தான் அமர முடியும். போ. காட்டில் சென்று இறைவனை வேண்டித் தவம் செய்து என் வயிற்றில் பிறக்கும் வரம் பெற்று வா! என்று கபடமறியாத குழந்தை துருவனிடம் கூறி அவனை அரண்மனையிலிருந்து துரத்தி விட்டாள் கொடிய மனதுடைய இளையவள். இவளின் முரட்டுச் செயல்கள் அத்தனையையும் பார்த்திருந்த அரசன் அவளுக்குப் பயந்து செய்வது அறியாது திகைத்து நின்றான்.

தந்தையின் மடியில் அமரமுடியவில்லையே என்று வருத்தம் ஒரு பக்கம், சிற்றன்னை வயிற்றில் பிறந்தால் தான் தன் தந்தையின் மடியில் தான் அமரமுடியும் அதற்குக் காட்டிற்குச் சென்று இறைவனை நினைந்து தவம் புரிய வேண்டும். இவ்வெண்ணம் பிஞ்சு மனதில் உறுதியாக பதிந்து விட்டது.

''எண்ணியது எண்ணியாங்கு எய்துவர்
அவ்வெண்ணம் திண்ணியராகப் பெறின்'' (குறள்)

என்ற குறளுக் கொப்ப இவ்வெண்ணமே தவிர வேறொரு சிந்தனையுமிலாது தன் தாயைக்கூட பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கூட இல்லாது நேரே தன் எண்ணத்தை ஈடேற்றி காடு நோக்கி விரைந்தான்.

காட்டிற்குச் சென்ற சிறுவன் அதி பயங்கரமான காட்டில் தான் இருப்பது கூடத் தெரியாது பயமில்லாது தன் எண்ணத்திலேயே மனம் லயித்தவனாய் இறைவனை நோக்கி இறைவா! என்னை சிற்றன்னையின் வயிற்றில் பிறக்கும் வரம் தா! என்று கூறி கதறி கண்ணீர் வடித்து உள்ளம் உருகி பிரார்த்தித்து நிற்க. குழந்தையே யானாலும் மற்று யாதொரு சிந்தனையும் இல்லாது ஒரே எண்ணத்தோடு இறைவனை (ஏகாக்கிரசித்தத்தோடு) நினைந்து நினைந்து உருகிய காரணத்தினால் இறைவனும் பிரத்தியக்ஷமாகினான். இறைவனின் தெரிசனத்தைக் கண்ட மாத்திரத்தில் உலகியல் ஆசையாகிய அற்ப ஆசை அகன்று உண்மை ஞானம் ஏற்பட்டு விட்டது. குழந்தை துருவன் தான் சிற்றன்னையின் வயிற்றில் பிறக்க வேண்டும் அப்பொழுதுதான் தன் தந்தையின் மடியில் அமரமுடியும் என்ற எண்ணத்துடன் இறைவனை வேண்டி துதித்தாலும் இறைவன் தெரிசனம் கிடைத்த மாத்திரத்தில் பெரும் ஞானியாக மாறி விட்டான். 60 வயதாகியும் பிறருக்குக் கிடைக்கப் பெறாத இப்பெரும் பாக்கியம் இச்சிறுவனுக்கு இளம் வயதிலேயே கிடைக்கப்பட்டு விட்டது எத்தகைய ஆச்சரியம். ''மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது'' என்ற பழமொழிக் கொப்ப இளம் பாலகனே யானாலும் பழுத்த ஞானியாக மாறிவிட்டான். இத்தகைய பெரும் மாற்றத்துடன் நாடு திரும்பிய துருவனை மக்களெல்லோரும் மிக்க மகிழ்ச்சியுடனும் பெரும் வியப்புடனும் வரவேற்று மரியாதை செய்தனர். அரசனும் தன் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டு தன் மகன் இச்சிறு வயதிலேயே பெரும் ஞானியாக மாறிய அற்புதத்தை எண்ணி எண்ணி வியந்து போற்றினான்.

இப்படியாக தன் தந்தையின் மடியில் அமர வேண்டும் அதற்கு சிற்றன்னையின் வயிற்றில்தான் பிறக்க வேண்டும் என்னும் அற்ப ஆசையினால் உந்தப் பட்டவனாக காட்டிற்குச் சென்று இறைவனை உருகி உருகி தபசு செய்தவனுக்கு கிடைத்தற்கரிய மெய்ஞானம் கிட்டியது. இப்பொழுதும் நக்ஷத்திரமாக ஆகாயத்தில் ஜொலித்துக் கொண்டிருக்கிறார் துருவன்.

வடதிசையில் சப்தரிஷிகள் என்று கூறப்படும் 7 நக்ஷத்திரத்தின் அருகில் (7 நக்ஷத்திரமும் தேளின் கொடுக்குப் போல் வளைந்து இருக்கும்) துருவ நக்ஷத்திரமாக என்றென்

றும் அழியாது ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இதை நாம் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் காணலாம்.

இதே போன்று உலக மக்களாகிய நாம் பொன், பொருள், பெண், மண், மற்றும் அற்ப ஆசைக்கு அடிமையாகி அதை எப்படியாகிலும் பெற வேண்டும் என்ற ஒரே ஆசையோடு இறைவனை நினைந்து நினைந்து கசிந்து கண்ணீர் மல்கினாலும் கூட அந்த இறைவனின் தெரிசனம் கிடைத்த மாத்திரத்தில் சூரியனைக் கண்டு இருள் விலகுவது போல கடவுளுடைய அருள் ஒளி கிடைத்த மாத்திரத்தில் நம்முடைய அஞ்ஞானமாகிய இருள் தானே அகன்று விடுகின்றன. கடவுளை மனமுருகி வேண்டுவதற்கு உலகியல் ஆசை ஓர் உறுதுணையாகக் கூட அமைந்து விடுகிறது. ஆகவே உலகியல் ஆசையினால் இறைவனை நினைந்து உருகினால் பின் உண்மை ஞானியாக மாறப்பட்டு பெரும் ஞானியாக திகழலாம். இது முற்றிலும் உண்மை என்பதை ''ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ்'' அவர்களை அடைந்த பல பேர்கள் தங்கள் தங்கள் உலக ஆசைகளில் தோல்வி அடையப் பெற்றதினால் மன முடைந்தவர்களாய், ஸ்வாமிஜியை அடைந்து சிஷ்யத்துவம் பெற்று உண்மை ஞானிகளாக மாறி, இப்பொழுதும், அரும் பெரும் காரியங்களை செய்யப் பெற்றவராய், குருமகராஜின் பேரருள் பூரணமாகக் கிடைக்கப் பெற்றவராய், தற் பொழுது அவர் எடுத்து நடத்தி வந்த நற் தொண்டை சிறப்புடன் செய்து கொண்டு வருகிறார்கள். இத்தகைய பேருண்மையை அறியாதார் மிகச் சிலரே. ஆகையினால் அற்ப உலகப் பொருள்களின் மேல் பற்றுள்ள நம் எல்லோருக்கும் இறைவனின் பேரருள் பூரணமாகக் கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் துருவனையும், ஸ்வாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களின் சிஷ்யர்களையும் உதாரணமாக எடுத்துக் கொண்டு ஊக்கமுடன் முன்னேறி இறைவனின் பேரருளைப் பெற முயலுவோமாக

''சத் குரு நாத மகராஜ்கீ ஜெய்''

# பாவநாசத் திருக் குறுந் தொகை

— ம. சி. சிதம்பரப்பிள்ளை —
(மாவை)

தினமும் நித்திரை விட்டெழுந்ததும் காலைக்கடன்களை முடித்து, இறைவனைத் தியானிக்கும் வகையில், ஐவர் அடங்கன் மூறையை இரு கரங்களினுலும் பயபக்தியோடு எடுத்து, நாள் ஒன்றுக்கு ஒரு பதிகமாகப் படிக்கலாமல்லவா? ஒருவன் தனது வாழ்வில் எத்தனை நாட்களைக் கடந்து மரண வாயிலைத் தாவுகின்ருன். எதற்கும் பின்போடும் பழக்கம் உள்ளவர்கள் ஆண்டவனை நினைக்கவும் பின் போடுகிருர்கள். அவ்வாறில்லாமல் தினமும் தேவாரத்தை உற்றுணர்ந்து உருகி, ஊறி, ஓதிக்கொண்டு வருப்போது, பிறவியாகிய அலைகடலில் அழுந்தாது இறையடி சேர ஒரு வாய்ப்புக் கிடைக்குமே! மூவர் அடங்கனில் அருட்செல்வம் வேறு எங்கு தேடினும் கிடையாதல்லவா?

இறைவனை நாயன்மார்கள் எவ்வாறு ஏற்றிப் புகழ்ந்து இறைஞ்சினுர்கள் என்பதனை தேவாரத்தை அருள்துணை கொண்டு ஓதுகின்றவர்கள் நன்குணர்வார்கள். 'வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான்' என்று சொல்லப்படுகின்றதே; திருநாவுக்கரசு சுவாமிகள் ஒரு பதிகத்தில் சொல்லுகின்ருர். உள்ளமானது அன்பினுல், கசிந்து உருகி; சிவனே என்று மெள்ள உரைத்தாலே எங்களைப் பற்றிய வினைகள் யாவும் கெடும்; இது உண்மை என்று உரைக்கின்ருர்கள்.

'உள்ள முள்கியுகந்து சிவனென்று
மெள்ளவுள்கவினை கெடுமெய்ம்மையே
புள்ளினுர் பணி புள்ளிருக்கும்வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே'

பிறவிகள் தோறும் எங்கட்குத் துணையாக இருப்பவனை, நாவினுல் எடுத்துரைக்கும் சொற்பதங்கட்கும் உறு

துணையானவனை, அருட் பெருஞ் சோதியாக உள்ளவனை, தினம் வந்தித்து, உற்று உணர்ந்து உருகி, ஊறி உள்ளம் கசிந்து நிற்பவர்கட்கு என்றும் நல்ல துணையாக இருப்பார் திரு நனி பள்ளியில் எழுந்தருளி யுள்ள எம் மிறைவன் என்று அருளும் திருவருட்பாவையும் பாருங்கள்:

'முற்றுணையாயினனை மூவர்க்கும் முதல்வன் தன்னைச்
சொற்றுணையாயினனைச் சோதியை யாதரித்து
உற்றுணர்ந்து உருகியூறி உள்கசிவுடையவர்க்கு
நற்றுணையாவர் போலு நனிபள்ளியடிகளாரே'

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த திரு அருட்பாக்களில், பாவநாசத் திருக்குறுந் தொகை ஐந்தாந் திருமுறையில் உள்ளது. உலகத்துள்ளோரை விழித்து, பல வழிகளில் அலமந்து போகும் மாந்தர்களைப் பார்த்து வினவுகின்றார்: இப்பதிகத்திலுள்ள பத்துத் திருப்பாக்களும் எங்கள் அறிவுக்கு நல்விருந்தாக அமைந்துள்ளது. படித் தின்புற வேண்டிய பாடல்கள். இறைவன் ஞானக் கொழுந்தாய், இன்பப் பிளம்பாய், அமுத சுரபியாய் உள்ளான். அன்புடன் அவனடி வணங்காவிடின்,

நீங்கள் கங்கையில் நீராடி லென்: குமரித் துறையில் ஆடினும் என்; பெரிய கடலில் நீராடி லென்: பட்டம் பெற்றவராகிலென்: சாத்திரம் அறிந்தவராகிலென்: வேத மோதியென்: சாத்திரம் கேட்டுமென்: நீதி நூல்களை நித் தலும் பயின்றுமென்: வாடி உடம்பை வருத்தியென் பட் டினியாகி யென்: மலைமேல் ஏறித் தவம் செய்துமென்: பல பல இடங்களுக்கும் சென்று நீராடிலென்: நல்ல தவம் செய்து வருந்தியும் என்:

சுவாமிகள் கூறுகின்றார்கள்:

'கோடி தீர்த்தங்கலந்து குளித்தவை
ஆடினும் அரனுக்கன்பில் லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடிவைத்திட்ட மூர்க்கனொடொக்குமே!'

அன்பில்லாத வழிபாட்டை இனிமையாக எடுத்து உவமையோடு காட்டுகின்றார்.

"பத்திவலையிற் படுவோன் காண்க"

"நூலுணர் உணரா நுண்ணியோன் காண்க" என

மாணிக்க வாசக வள்ளல் அருளியவாறு இறைவனை நூல்கள் பல கற்று உணர முடியாது. அவரைப் பிடித்து எமது அகத்துள் அரசிறை வைக்க வலை ஒன்றுளது. அது வே பக்தி வலை. அதனை அவர்பால் மெல்லவே வீச வேண்டும். அவர் தானுகவே வந்து அருள்வார். உடனே நாம் சிக்கெனப் பிடித்தால் அவர் எவ்வாறு மீள்வார்: வள்ளி நாயகியாரை ஆட்கொண்டாரே: மலைமகளை வந்து மருவினுரே: அவ்வாறெனலாம்:

பிறவிகள் தோறும் செய்த பாவமூட்டைகள் பாறும் வண்ணம், காதலாகிக் கசிந்து பாடி ஆடிக் கண்ணீர் சிந்தி, பித்தனுக மாறினுல் மதியைச் சூடிய, மன்மதனைச் சாடிய, எமனை உதைத்த எம்மிறைவன் எங்களை ஆட்கொள்ளுவார்: சுவாமிகள் எவ்வளவு தெளிவாக எடுத்து வேறு ஓர் இடத்தில் உரைக்கின்ருர்.

என்னைக் கல்லோடு கட்டினுர்களே புற சமயப் பாதகர்கள்: அப்போது எனது வாக்கினுல், நெல் வயல் சூழ்ந்த திரு நீலக் குடியில் எழுந்தருளியுள்ள அரனை நல்ல நாமங்கள் எடுத்து நவிற்றி நான் உய்ந்து போக வில்லையா: ஏமாந்தர்களே: மயக்க மேன்? எனத் தோன்ருக் குறையாகக் கூறுகிருர். அவருடைய வாக்கினுல் எழுந்த திரு அமுதத்தைப் பருகுவோம்:

'கல்லினேடெனைப் பூட்டிய மண் கையர்
ஒல்லைநீர் புக நூக்க வென் வாக்கினுல்
நெல்லுநீள் வயல் நீலக் குடியரன்
நல்ல நாம நவிற்றியுய்ந் தேனன்றே'

எமையாளும் ஈசன், அப்பர் சுவாமிகள் பொருட்டுச் செய்த அற்புதங்களையும் திருவருட் செயல்களையும் அவர்

வாக்கினால் எவ்வாறு உரைக்கின்றார். என்னே! அப்பரின் அனுபவம்:

'எங்கே யென்னை யிருந்திடந்தேடிக் கொண்
டங்கே வந்த டையாளமையருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனாரதென் கொலோ!'

என்று வாயாரப்பாடி ஆச்சரியக் கடலுள் அவரும் மூழ்கி, எம்மனோரையும் மூழ்கித் திளைக்க வைக்கின்றார்கள்.

என்னே அவர் அநுபவம்:
வாழ்த்துதும், ஏற்றுதும்:. போற்றுதும்:

---

சிறிய கருப்புப் புள்ளியொன்றை நடுவில் கொண்ட ஒரு அங்குல நீளம்கூட இல்லாத இந்த புறக்கண்ணே எண்ணற்ற கோடிக்கணக்கான மைல்கள் தொலைவுக்கு அப்பால் உள்ள நக்ஷத்திரங்களைக் காண முடிகிறது எனில் ஆன்மீக சக்தி வாய்ந்த அகக்கண் எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும்? இப்பேரண்டத்தின் வெளியே தெரியாத பல நுண்ணிய பொருள்களை எத்துணை ஆழம் நுழைந்து காண இயலும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அத்தகைய அகக்கண்ணைப் பெறப் பேரவா கொள்க.

* * *

காமம், குரோதம், லோபம், அசூயை, (சிற்றின்பம் உட்பகை, பேராசை, பொறாமை) எனப்படுகிற நான்கு திருடர்கள் சரீரம் என்கிற அறையில் இருதய பீடத்தின் மீது மிக இரகசியமாகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள ஞானரத்தினங்களை அபகரிக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். சரியான சமயத்தை அறிந்து சர்வ இரட்சகரான சர்வேஸ்வரனை வழிபட்டு, ஞானசெல்வத்தை நிலைபெறச் செய்ய வேண்டும். அன்புச் செல்வத்தை அடைய முயலுங்கள்.

—சத்திய சாயி பாபா.

---

## சமயபுரம் (கண்ணனூர்) ஸ்ரீ மாரியம்மன்

# கோயில் வரலாறு

— மூத்து —

எனது தந்தையார் நாங்கள் படுக்கைக்குப் போன பின்பு படுக்கையில் இருந்து கொண்டே இரவில் வெள்ளி திங்கட் கிழமைகளில் மாரியம்மன் தாலாட்டு படிப்பார்கள். அதிலே ஒருவரி என்னையும் அறியாமலே எனதுள்ளத்தில் பதிந்து கொண்டது. ''சமயபுரத்தாளே சங்கடங்கள் தீர்ப்பவளே'' என்பதுதான் அந்த வரி. சமயபுரம் ஒரு ஊர் என்பதும் அது எங்கிருக்கிற தென்பதும் வெகு நாட்கள் அறியாதிருந்தேன்.

இம் முறை திருத்தல யாத்திரையாக இந்தியா சென்றிருந்த போது திருச்சிறைப் பள்ளியில் தங்கி நின்று சுற்று வட்டாரக் கோயில்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. எம்மைக் கூட்டிச் சென்ற அன்பர் சமயபுரம் இங்கிருந்து 12 மைல் தூரத்திலுள்ளது. இங்குள்ள மக்கள் சமயபுரத்தாயிடம் மிக்க பயபக்தி உள்ளவர்கள் என்றெல்லாம் கூறினார்கள். அவர் சமயபுரம் என்றதுமே எனக்கு என் தந்தையார் படித்த அடிகள் நினைவுக்கு வந்தன. அதனால் சமயபுரத்தாயை இருமுறை தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இத்தலம் மிகப் பழமையான சிறப்புடையது. சரித்திரப் பிரசித்தி பெற்றது. புண்ணியத்தலமாகப் போற்றப்பட்டு வருவது. பழமைக்கு அடையாளமாக பூமிக்கடியில் கட்டிடங்களின் சின்னங்கள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. கோடைக் காலத்திலே பெருந்திரளான மக்கள் இவ்வூருக்குப் புறப்பட்டு வந்து தங்கியிருந்து தங்களுக்கு விருப்பமான காணிக்கைப் பொருள்களைச் செலுத்திச் செல்வர். கோயிலுக்குள் உயிர்ப்பலி கிடையாது. அந்த மூடக் கொள்கை கோயிலில் தவிர்க்கப்பட்டுளது. உப்பு, வெல்லம், தானியம், ஆடு, கோழி, முதலியனவும், தங்கம், வெள்ளி, ஆபரணங்களும் காணிக்கையாகச் செலுத்தப் படும்.

சில பிரார்த்தனைக்காரர்கள் சிலவருடங்களுக்கு முன்பு உடல் முழுவதும் செடில் குத்திக் காவடி எடுக்கும் வழக்கம் இருந்தது. அது இப்போ நின்று விட்டது. முகம் மதிய சமூகத்தினரும் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு வருகின்றனர்கள்.

ஹொய்சல மன்னனான வீரசோமேஸ்வரதேவன் 13-ம் நூற்றாண்டில் இவ்வூரைத் தலைநகரமாக்கி விக்கிரமபுரம் என்னும் பெயரை வைத்து ஆட்சி புரிந்து வந்தான். இவன் இவ்வூரில் ஓர் சிவன் கோயிலை அமைத்து அதற்கு பொய்சலேஸ்வரம் என்ற பெயரிட்டு வழிபட்டுவந்தான். அது தற்போது போஜராஜ கோயில் என வழங்குகிறது. இந்த ஊரில் உள்ள மாரியம்மன் விக்கிரகம் ஆதியில் சமயபுரத்தில் ஒரு குடிசையில் இருந்து வந்ததாகவும் பிறகு தற்போதுள்ள கண்ணனூரில் 1804இல் விஜயரங்க சொக்கநாத நாயக்க மன்னரால் புதிய ஆலயத்தில்பிரதிட்டைசெய்யப்பட்டதாகவும்பூஜைக்கு வேண்டிய நிலங்களும், பணமும், ஆபரணங்களும் அவரால் அளிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. பலமானியங்களும் கோயில் சிப்பந்திகளுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இக்கோயிலில் பாண்டியர்களுக்குரிய மீன் வடிவங்கள் பொறிக்கப்பெற்றுள்ளன.

இத்தலத்தின் அம்மன் மாரியம்மன் என்று வழங்கப்பெறும் சீதளகௌமாரி, மகாமாயை என்றும் இன்னும் வேறு பெயர்களும் உண்டு. இம்மூர்த்தி துர்க்கையின் அம்சத்தைச் சேர்ந்தது. நூல்களில் காளி, விஜயை, வைணவி, சண்டிகை, சாரதை, சாமுண்டி, மகிஷாசுர மர்த்தனி, வராகி, அபிராமி முதலிய திருநாமங்களுடன் விளங்கும். இம்மூர்த்தி உயிர்களுக்குப் பகையாயுள்ள அசுரர்களையும் அசுரகுணங்களையும் அழித்து உயிர்களை நல்வழிப்படுத்தும்.

இத்தலத்து அம்மனைப்பற்றி பல தெய்வீக வரலாறுகள் சொல்லப்படுகின்றன. அம்மன் உருவச்சிலை ஹொய்சலமன்னனால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், விஜயமன்னர்களால் போற்றப்பட்டுவந்ததென்றும், அந்த இராச்சியத்திற்குத் தளர்ச்சி நேர்ந்த பொழுது இந்த அம்மன் ஒரு தந்தப் பல்லக்கில் இவ்விடத்திற்குக் கொண்டுவரப்பட்டதென்றும் சொல்லப்படுகின்றது. அம்மன் மிகச் சக்தியுடையது. சகல நோய்களையும் தீர்க்கும் ஆற்றலுடையது. வேண்டுவோர் வேண்டியதை விரும்பி அளிக்கவல்லது.

தொடரும்.

# இமாலயன் பற்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து
பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது.

## இமாலயன் பற்பொடி

பல் வலி, பல் அரணை பல்லில் இரத்தம் வடிதல்

முதலியவற்றை நீக்கி, தந்த வாய்வு, பல்லில் குழி விழுதல் வாய்நாற்றம் ஆகியவற்றை அறவே போக்கி, முத்துப் போன்ற வெண்மையையும் மோகனத் தோற்றத்தையும் தருகிறது.

# இமாலயன் பற்பொடி

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.

ரின் ஒன்று விலை ரூபா 1. தபாற் செலவு 50 சதம்.

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 19 ஆண்டுகள் பூர்த்தியாகி 20வதுஆண்டு ஆரம்பமாகி முதலாவது இதழும் வெளிவந்துள்ளது. பல சந்தாநேயர்களுடைய ஆதரவினாலேயே ஜோதி மாதந்தோறும் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்தியாவில் உள்ளவர்கள் தங்கள் சந்தாவை வழக்கம் போல்

## R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ்,
அரிசிப்பாளையம், சேலம் – 9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்து இவ்விடமும் அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

# ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி, (இலங்கை)

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 18-11-67.